1972 டிசம்பர் 13]

* 145 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state--

(*a*) whether B.Com. Degree Course is to be introduced in Government Polytechnics in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) தற்போது மகளிர் பல்தொழிற் பயிற்சிக் கூடங்களில் மூன்று ஆண்டு படிப்பு கொண்ட வணிக இயல் பட்டயப் படிப்பு நடத்தப்பட்டு வருகிறது. இதைத் தொடர்ந்து ஒரு ஆண்டு பி.காம். பட்டயப் படிப்பு நடத்தப்படுவது பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

செவிலியர் பயிற்சி.

* 146 வினு—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ஆம் ஆண்டு, சென்னையில் நர்சு பயிற்சிக்காக சேர்க்கப்பட்ட பெண்கள் எத்தனை பேர்?

(இ) ஆண்கள் எத்தனை பேர்?

(உ) அவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 65.

(இ) ஒருவருமில்லை.

(உ) அவர்களது பயிற்சிக் காலம் இன்னும் முடியவில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்போது கிராமப் புறங்களில் அல்லது தாலூக்கா தலைநகரில் உள்ள ஹாஸ்பிடல்களில் போதிய நர்ஸ் வசதியில்லை, குறைவாக இருக்கிறது என்று அறியப் படுகிறது. அதற்காக இன்னும் அதிகமான பெண் நர்ஸ்கள் சேர்க்க வசதி செய்யப்படுமா? ஆண்கள் நர்ஸ் பதவிக்குச் சேர்க்கப் படுவதில்லை என்பதற்கான காரணத்தையும் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, செவிலியர் களாக பணியாற்றுவதற்குப் பெண்கள் தான் அதிகமான சிறப்புத் தகுதியை இயல்பாகப் பெற்று இருக்கிறார்கள். செவிலியர்களாகப்